PR. no. 69 Date: 30.04.2013.

# பத்திரிக்கை செய்தி

உதகமண்டலம் வட்ட நில உடமைதாரர்களுக்கான இணைய வழியில்(**internet**) நில ஆவணங்களை பராமரிப்பதற்குரிய மென்பொருளை முன்னோடித் திட்டமாக செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, இதனை செயல்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ஒரு வட்டம் முன்னோடியாக தேர்தெடுக்கப்பட்டுள்ளது

நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம் வட்டம் முன்னோடிவட்டமாக தேர்வுசெய்யப்பட்டுள்ளது. வட்டாட்சியர் அலுவலக கணினியில் பராமரிக்கப்படும் நில ஆவணத் தகவல் தொகுப்பினை, தேசிய தகவல் மையத்திற்கு பதிவேற்றம் செய்யும் முன்னர் தற்போதைய நிலையை பிரதிபலிக்கும் வண்ணம் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, உதகமண்டலம் வட்டத்தைச் சேர்ந்த 1) மசினகுடி, 2) கடநாடு 3)எப்பநாடு, 4)கூக்கல் 5) தூனேரி 6) உல்லத்தி 7) சோலூர் 8) நடுவட்டம் 9) நஞ்சநாடு 10) உதகை ரூரல் 11) தும்மனட்டி, 12) கக்குச்சி ஆகிய வருவாய் கிராமங்களை சேர்ந்த நில உடமைதாரர்கள் தமது நிலஆவணங்களில் பெயர் மாற்றம், பிழைகள் நீக்கம் செய்தல் போன்ற மாற்றங்களை பதிவு செய்ய விரும்புவோர் தமது விண்ணப்பங்களை நில உரிமைப் பத்திரங்களின் நகல்களுடன் 10-05-2013 அல்லது அதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் அல்லது வருவாய் வட்டாட்சியர் உதகமண்டலம் அவர்களிடம் ஒப்படைக்குமாறு 11-04-2013 மற்றும் 12-04-2013 ஆகிய நாட்களில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இவ்வறிவிப்பு கிராம சாவடிகளிலும் ஒட்டப்பட்டுள்ளது. மேலும் உதகை தொலை காட்சியிலும் **(U.TV)** விளம்பரம் செய்யப்பட்டுள்ளது

எனவே நிலஉடமைதாராகள் இந்த அறியவாய்பினை பயன்படுத்தி உதகமண்டலம் வட்டத்தைசார்ந்த நிலஉடமைதாரர்கள் தமது நில ஆவணங்களில் மாற்றம் செய்வோ, பிழைகளை நீக்கம் செய்யதல் போன்ற மாற்றங்களை பதிவு செய்ய விரும்புவோர், தமது விண்ணப்பங்களை நில உரிமைப்பத்திரங்களின் நகல்களுடன் 10-05-2013 அல்லது அதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் அல்லது வருவாய் வட்டாட்சியர் உதகமண்டலம் அவர்களிடம் ஒப்படைக்குமாறு மாவட்ட ஆட்சிதலைவர் அறிவித்துள்ளார். இவ்வாய்பினை தவறாமல் பயன்படுத்தி கொள்ளுமாறு நிலஉடமைதாரர்கள் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு 0423-2442433 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

ஒம்/

மாவட்ட ஆட்சித் தலைவர்,

உண்மைநகல் [signature] 30.4.13

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்